தூய தமிழ்க் காவலர்
கு. மு. அண்ணல்தங்கோ
நூலகம்

சமதர்ம வெளியீடு 1.

சென்னை மாகாண

## காங்கிரஸ் மந்திரிகள்

கொண்டுவரவிருக்கும்,

# விற்பனை வரி

# கண்டனம்.

இவை:

காஞ்சிபுரம் நேடிவ் டாக்டர். சமதர்ம நாஸ்திக

C. K. குப்புசாமி அவர்களால்,

வெளியிடப்பட்டது

திருவத்திபுரம், ஸ்ரீ இலக்ஷ்மி பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

1939

விலை அணா.] [0—3—0

00333

தூய தமிழ்க் காவலர்
கு. மு. அண்ணல்தங்கோ
நூலகம்

சென்னை மாகாண வியாபாரிகளுக்கு விற்பனை வரி விதிக்க சென்னை சர்க்கார் முடிவு செய்து அதன் ஷரத்-துக்களை கெஜட்டில் வெளியிட்டிருக்கிறார்கள்.

விற்பனை வரி மசோதா நாட்டுமக்கள் எல்லோரையும் பாதிக்குமென்று காங்கிரஸ்காரர்களில் பெரும்பாலோர் கூறுகின்றனர். இவ்வரியினால் பெரிய வியாபாரிகள் மட்டுமே பாதிக்கப்படுவார்களெனச் சர்க்கார் கூறுவது உண்மையானதல்ல.

விற்பனைவரியால் சிறிய வர்த்தகர்களையும், ஏழைகளான தொழிலாளரையும், விவசாயிகளையும், பொது மக்களையும் பாதிக்குமென்று பல அறிஞர்கள் விளக்கமாக கூறிவிட்டார்கள்.

வெற்றிலை பாக்குக் கடைக்காரர்கள், காய் கறி வியாபாரிகள், பொன் — வெள்ளி வியாபாரிகள், பித்தளைச் சாமான் — இரும்பு வர்த்தகர்கள், நூல்—ஜவுளி—மண்டி தோல் வியாபாரிகள், புத்தகம்—பேப்பர் வியாபாரிகள் மற்-றும் எல்லா வர்த்தகர்களையுமே விற்பனை வரி பாதிக்குமென்பதைப் பல ஊர்களில் நடைபெற்ற கண்டனக் கூட்டங்களில் தெளிவாக எடுத்துக்காட்டிய பின்பும், பிரஸ்தாப வரி விதிப்புக் கொள்கையை சர்க்கார் விட்டுக்கொடுக்காமல் இருப்பது நேர்மையல்ல.

இந்த வரியில் அநேக குறைகளும், கஷ்டங்களும் உள்ளன. இது லாபத்தின் மீது விதிக்கப்படும் வரியல்ல.

ரொக்கத்திற்கோ கடனுக்கோ விற்பனையாகும் சரக்குகள் எல்லாவற்றிற்கும் வரி கொடுக்கவேண்டுமெனக் கூறுவது நியாயமா?.

நஷ்டத்திற்கு விற்கும் சரக்குகளுக்கும் வசூலாகா

தெனத் தள்ளி விடும் பாக்கிகளுக்கும் வரி கொடுக்க வேண்டுமென்பது பிரஸ்தாப மசோதாவின் நோக்கம் என்பதை சகல வியாபாரிகளும் நன்கு உணர வேண்டும்.

கொள் முதல் சாமான்களின் மீது ஏற்படும் ரயில் சார்ஜு முதலிய செலவுகட்கும் இதாகண்டின்ஜண்டு செலவுகட்கும் சேர்த்து வரி கொடுக்க வேண்டுமானால் வியாபாரிகள் வியாபாரம் செய்து ஜீவிக்க முடியுமா? ஜீவிக்க முடியாதென்றால் நியாயமான முறையில் விற்பனை வரியை எதிர்க்க வேண்டாமா?

ஒரு சரக்கு பல வியாபாரிகளின் கைக்கு மாறும்போது அந்த ஒரே சரக்குக்குப் பலரும் வரி கொடுப்பதென்றால் இதை விட கொடுமையான வரி வேறுயிருக்கிறதா என்று வியாபாரிகள் சிந்திக்க வேண்டும். வியாபார மந்தமுள்ள இக்காலத்தில் இவ்வரி பலசில்லரை வியாபாரிகளை கெடுத்து விடுமென்பதில் சந்தேக மில்லை. விற்பனைவரி பெரிய வியாபாரிகளை மட்டும் பாதிப்பதாயிருந்தால் விற்பனைவரியைப் பற்றி கவலைப்படாமல் விற்பனை வரியைக் கொண்டு வந்த காங்கிரஸ் மந்திரி சபையை வாழ்த்துவோம்.

சென்னை மாகாணத்திலுள்ள வியாபாரிகளில் பெரும் பாலோர் சாதாரண வியாபாரிகள் என்பதை எவராலும் மறுக்க முடியாது. சாதாரண வியாபாரிகளில் பெரும் பாலோர், உயர்தர முதலாளிகளிடம் அதிக வட்டிக்கு கடன் பட்டு வியாபாரம் செய்து வருகிறார்கள். கடந்த சில மாதங்களாக மழையில்லாததால் விவசாயிகளுக்கு பெரும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதால் வியாபாரம் மந்தம் அதிகரித்திருக்கிறது.

வியாபார மந்தம் நீடித்திருக்கும் இக்காலத்தில் விற்பனை வரி விதிப்பதென்றால் சாதாரண வியாபாரிகளை கொலைசெய்வதாகுமென்று காங்கிரஸ் மந்திரிகளுக்கு எச்சரிக்கை செய்திருக்கிறோம்.

நாட்டில் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. சாதாரண வியாபாரிகளிடம் கடன் வாங்கின ஏழைமக்கள் கடனை திருப்பி கொடுக்க சக்தியில்லாமல் அல்லல்படுகின்றனர்.

இதனால் சாதாரண வியாபாரிகள் உயர்தர முதலாளிகளிடம் அடிமைகளாக அவதிப்படுகின்றனர். உயர்தர முதலாளிகள், சாதாரண வியாபாரிகளை பல துறைகளிலும் முன்னேற ஒட்டாமல் தடுத்து வாட்டி வதக்கி இம்சித்து கடனை வசூல் செய்கிறார்கள். மத்தியதர முதலாளிகளைப் பற்றி விவரிக்க ஆசைப்படவில்லை. ஏனெனில் மத்தியதர முதலாளிகளில் பலர் இன்சால் மெண்டு கொடுக்க யோசித்து வருகிறார்கள் அவர்கள் நிலமை மிகவும் பரிதாபகரமாக யிருந்து வருகிறது. விற்பனை வரியால் வியாபாரிகளை மட்டும் பாதிப்பதாக கருத முடியாது.

வியாபாரிகளிடம் வியாபாரம் செய்யும் சகல தொழிலாளரையும், பாமரர்களையும், பாட்டாளிமக்களையும் பாதிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறோம். விற்பனைவரி செலுத்தும் வியாபாரிகள், வியாபாரம் செய்யும் சாமான்கள் மீது விலையை ஏற்றி ஏழைமக்களை கசக்கி பிழிவார்கள் விற்பனை வரியால் ஏழைமக்களையே நசுக்கப்படும். சேலம் ஜில்லாவில் கள்ளுக்கடையை எடுத்ததற்காக சாதாரண வியாபாரிகளுக்கு விற்பனைவரி விதித்து பட்ஜட்டை சரிகட்ட பார்ப்பது புத்திசாலித்தனமல்ல. 'கள்ளுக்கடையை எடுத்து விட்டதால் சேலத்தில் கள் குடி நின்று விடவில்லை. மேல் நாட்டின் முறையை அனுஷ்டிப்பது நீதியா?,

மேல்நாட்டிலுள்ள வியாபாரிகளுக்கு விற்பனைவரி விதிக்கப்படுவது உண்மை என்றாலும், நம் சென்னை மாகாணத்திற்கு விற்பனை வரி விதிப்பது நீதியானதல்ல.

மேல்நாட்டிலுள்ள வியாபாரிகளில் பெரும்பாலோர் உயர்தர வியாபாரிகளாகக் காணப்படுகின்றனர்.

மேல்நாட்டு வியாபாரிகளுக்கு நூத்துக்கு 80-பாகம் கொழுத்த லாபம் கிடைக்கிறது, ஒவ்வொரு வியாபாரியும் கப்பல், ரயில், படகு முதலிய கம்பெனிகளில் ஷேர்தாரர் களாக சேர்ந்திருக்கின்றனர்.

கூட்டுறவு முறையால் பல ஆதாயங்கள் கிடைக்கின்றன.

நம் சென்னை மாகாணத்திலுள்ள வியாபாரிகளுக்கு யந்திரவசதி கிடையாது. ஒன்றுக்கு பத்தாக கப்பல் ரயில் முதலியவைகளுக்கு வாடகை சிலவுகளை கொடுத்து வருகி ருர்கள். மற்றும் இதர சிலவுகளை செய்து நஷ்டமடைகிருர் கள்.

சென்னை மாகாண வியாபாரிகளுக்கு நூத்துக்கு 3-பாகம் லாபம் கிடைக்காது. இன்கம் டாக்ஸ் வரி தனியாக இருந்து வருகிறது.

நகரசபைகளில் தொழில் வரியும் விதிக்கப்பட்டிருக்-கிறது.

போதாக் குறைக்கு விற்பனைவரி செலுத்த வேண்டு மானல், வியாபாரிகள் வியாபாரம் செய்து வாழமுடியுமா வென்று வியாபாரிகளையே கேட்கின்ருேம்.

மேல் நாட்டிலுள்ள வியாபாரிகள் கட்டுப்பாடுடன் ஒற்றுமையாக கூட்டுறவு முறையில் வியாபாரம் செய்து வருவதால் வியாபாரம் அழியாமல் நாளுக்குநாள் வியாபாரம் வளர்ந்து வருகிறது.

சென்னை மாகாண வியாபாரிகள் நிலமை மிகவும் பரி தாபகரமாக யிருந்து வருகிறது.

வருடத்திற்கு மூன்று விலாசங்கள் மாறிக்கொண்டிருக் கிறது. கூட்டு வியாபாரிகளுக்குள் ஒற்றுமை இல்லாமல் அடிக்

கடி விலாசத்தை மாற்றிக்கொள்வதோடு கோர்ட்டுகளுக்குச் சென்று வாதாடுகிறார்கள்.

ஆகவே மேல்நாட்டின் முறையை சென்னை மாகாணத்தில் அனுஷ்டிப்பது நீதியல்ல. உதாரணமாக காஞ்சிபுரம் ஆடிசன்பேட்டை பிரபல ஜவுளி வியாபாரியான சின்னசாமியார் என்கிற தோழர் V.P.S. சரவண முதலியார் என்பவர் ரொக்க கொள்முதல் செய்து ரொக்கத்திற்கே விற்பனை செய்து வந்தார் என்பதைஎவராலும் மறுக்கமுடியாது.

தற்போது ஷெ யார் நிலமை எவ்வாறிருக்கிறது? ஷெயாருக்கு ஏற்பட்ட வியாபார நஷ்ட ஈடுக்காக ஷெ யார் தமயனாரும் தோழருமான பெரியசாமியார் என்கிற V.P.S கிருஷ்ணசாமி முதலியார் பல முறை ஆயிரம் கணக்கான ரூபாய்கள் உதவி செய்தும் வியாபாரம் முன்னேற்ற மடையாமல் வியாபாரம் மறைந்து விட்டதென்றால், கடனுக்கு கொள்முதல் செய்து கடனுக்கு விற்பனை செய்யும் வியாபாரிகளைப்பற்றி கூறவும் வேண்டுமோ.

**சென்னை மாகாண சாதாரண வியாபாரிகளின் பரிதாப நிலை.**

சென்னை மாகாணத்திலுள்ள வியாபாரிகளின் பரிதாப நிலையைப்பற்றி விளக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதற்காக மகிழ்ச்சியடைய வேண்டியிருக்கிறது.

சென்னை மாகாணத்திலுள்ள சாதாரண வியாபாரிகளில் பெரும்பாலோர் உயர்தர முதலாளிகளிடம் அதிக வட்டிக்கு கடன் வாங்கி முதல் வைத்து வியாபாரம் செய்கிறார்கள்,

கண்டின்ஜண்டு சிலவுகள் போக தங்கள் குடும்பநிர்வாகங்களை நடத்துவதற்கே முடியாமல் கலங்குகின்றனர். கடன் கொடுத்த உயர்தர முதலாளிகள் கடனை திருப்பி கொடுக்கவேண்டுமென்று தொந்தரவு செய்கிறார்கள். சிலர்

கோர்ட்டுகளுக்குச் சென்று கடைகளை பறிமுதல் செய்கிறார்கள். விவசாய நிவாரண மசோதா அமுலுக்கு வந்த பிறகு உயர்தர முதலாளிகளும், மத்தியதர முதலாளிகளும் கீழ்தர முதலாளிகளும் ஒன்று சேர்ந்து கட்டுப்பாடுடன் ஏழைகளான வியாபாரிகளுக்கு கடன் கொடுக்காமல் தங்கள் பணத்தை இரும்பு பெட்டியில் வைத்து காவல் காத்து வருகின்றனர். கடனுக்கு கொள் முதல் செய்து கடனுக்கு விற்பனை செய்வதால் வியாபாரம் நாளுக்கு நாள் குறைவு பட்டு வருகிறது.

இந்நிலையில் விற்பனைவரி விதிக்கப்படுமானால் சாதாரண வியாபாரிகளை அடியோடு நசுக்கப்படும் என்பதை பிரதம மந்திரி தோழர். **சி. ராஜகோபாலாச்சாரியார்** உணர வேண்டும்.

### பார்சல் கட்டும் வியாபாரிகளின் நிலைமை

பார்சல் கட்டும் வியாபாரிகளைப்பற்றி ஆராய்வோம். 5-ஆயிரம், 10-ஆயிரம், 20-ஆயிரம் ரூபாய்களுக்கு தினுசுகளை கொள் முதல் செய்து வெளியூர் வியாபாரிகளுக்கு பார்சல் கட்டும் வியாபாரிகளின் நிலைமை மிகமோசமாக யிருந்து வருகிறது. கடந்த இருபது ஆண்டுகளுக்கு முன்பு வெளியூர் வியாபாரிகளிடமிருந்து முன்பணம் வந்துக்கொண்டிருந்தது.

தற்போது அதே வியாபாரிகளுக்கு பார்சல் கட்டி கடனுக்கு அனுப்ப வேண்டியிருக்கிறது. கடந்த இருபது ஆண்டுகளுக்கு முன்பு அதாவது முன்பணம் வந்துக்கொண்டிருந்த காலத்தில் ரூபாய்க்கு நாலணா அல்லது இரண்டு அணாலாபம் கிடைத்தது. தற்சமயம் ரூபாய்க்கு ஒரு அணா லாபம் கிடைப்பது அறிதாயிருக்கிறது. வெளியூர் வியாபாரிகளில் சிலர் அடிக்கடி கடைகளை மூடிவிடுவதோடு இன்சால்மெண்டும் கொடுக்கிறார்கள். இது சமயம் முதலுக்கே ஆபத்து நேர்ந்திருக்கிறது,

## சென்னை மாகாண உற்பத்தியாளர் திண்டாட்டம்.

சென்னை மாகாணத்தில் ஜவுளி தினுசுகளை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர் நிலமை திண்டாட்டமாக யிருந்து வருகிறது.

சென்னை மாகாண உற்பத்தியாளர் அதாவது கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்யும் ஜவுளி தினுசுகளுக்கு, வட நாட்டு பஜாஜி மில்களும், பிர்லாமில்களும், மோடிமில் களும், மற்றும், பலமில்களும் போட்டிப் போடுகின்றனர். வட நாட்டு மில் ஜவுளி தினுசுகளை தென்னாட்டு வியாபாரி கள் வருடத்திற்கு 25-கோடி ரூபாய்களுக்குமேல் கொள் முதல் செய்கிறார்கள்.

ஆனால் தென்னாட்டு ஜவுளி வியாபாரிகளிடமிருந்து வட நாட்டு ஜவுளி வியாபாரிகள் வருடத்திற்கு ஒருகோடி ரூபாய்களுக்காவது ஜவுளி தினுசுகளை கொள் முதல் செய் கிறார்களா வென்று தென்னாட்டு காங்கிரஸ் பக்தர்களான ஜவுளி வியாபாரிகளைக்கேட்கின்றோம்.

வட நாட்டார்கள், தென்னாட்டவர்களை மிகக் கேவல மாக கருதுகிறார்கள். போதாக்குறைக்கு மேல் நாட்டு ஜவுளி தினுசுகள் சென்னை மாகாணத்தில் ஏராளமாக இறக்கு மதி செய்யப்படுகிறது. இதனால், நாம் மேல் நாட்டு ஜவுளி யை பகிஷ்கரிப்பதாக கருத முடியாது. பொதுவுடமை கட்சியைச் சேர்ந்தவர்கள் ஏனைய தேசத்து சாமான்களையும் முழுமனதுடன் ஆதரிக்க வேண்டும் என்பதை உணர்ந்திருக் கிறோம்.

### ஆனால், சென்னை மாகாண கைத்தறி நெசவாளர்களின் கதி என்ன?

சென்னை மாகாணத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களில் பலர்முழுப்பட்டினியாக வாடிவதங்கி உறங்கிக்கிடக்கிறார்கள்.

அவர்களில் சிலர் பகிரங்கமாக பிச்சை எடுத்து பிழைத்து வருகிறுர்கள். மற்றும் சிலர் யாத்திரை செய்வதாக தேச சஞ்சாரம் செய்து வருகிறுர்கள்.

இக்கோர சம்பவங்களை இனி சகிக்க முடியாது என்பதை காருண்யம்நிறைந்த காங்கிரஸ் மந்திரிகளுக்கு வணக்கமாக தெரிவித்துக்கொள்ளுகிறேம். சென்னை மாகாண கைத்தறி நெசவாளர்கள் இருப்பதா? அல்லது இறப்பதா? என்கிற முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது.

பட்ஜட்டில் துண்டுவிழும் $17\frac{1}{2}$-லக்ஷ ரூபாயிக்காக விற்பனை வரி விதிப்பது ஏழை மக்களை நசுக்குவதாகும். வியாபாரிகளுக்கு விற்பனைவரி விதிப்பதால் விற்பனை வரியின் மூலம் சுமார் 15-கோடி ரூபாய் வசூலாகுமென்று தோழர் **ராமலிங்க செட்டியார்** கூறுகிறுர். பட்ஜட்டில் துண்டு விழும் $17\frac{1}{2}$-லக்ஷத்திற்காக விற்பனைவரி விதித்து 15-கோடி ரூபாய் வசூலிப்பதென்றுல் இதை யார்தான் சகிக்க முடியும். பாட்டாளி மக்களையும், தொழிலாளரையும் கசக்கிபிழிந்தால்தான் விற்பனைவரியால் 15-கோடி ரூபாய் வசூல் செய்ய முடியும் என்பதை காங்கிரஸ் தலைவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேம்.

**புது புது வரிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன.**

எலக்ட்ரி ஒரு யூனிட்டிற்கு $\frac{1}{2}$-அணு உயர்த்தப்பட்டிருக்கிறது.

பெட்ரோல் காலன் 1-க்கு $1\frac{1}{2}$-அணு உயர்த்தப்பட்டிருக்கிறது.

தமாஷாவரி கொண்டுவந்திருக்கிறுர்கள்.

மதுவிலக்கு கொண்டுவராத ஜில்லாக்களில் விற்பனை செய்யும் சாராயங்களுக்கு 1-க்கு $1\frac{1}{2}$-ஆக டூட்டி விதிக்கப் போகிறுர்கள்.

பவுண்டு மாடுகளுக்கு1-க்கு 1½-வீதம் வரி விதிக்கப்பட்டிருக்கிறது.

முன்பு மாடு 1-க்கு 0—4—0 கொடுத்து வந்ததை தற்போது 0—6—0 அணுவாக செய்திருக்கிறார்கள்.

ஜவுளிக்கடைகளுக்கும் தலைமூட்டை ஜவுளிகளுக்கும் வரி விதிக்கப்பட்டிருக்கிறது.

எல். எம். பி. டாக்டர்களை கொழுக்கவைப்பதற்காக நாட்டு வைத்தியர்களுக்கு 15—12—0 ரூபா வரி விதிக்கப்பட்டிருக்கிறது.

ரிஜிஸ்த்திரேஷன் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது.

கலியாண வரி, மரண வரி விதிக்கப்போவதாக தெரிய வருகிறது.

மனிதர்கள் உண்பதற்கும் உறங்குவதற்கும் வரி விதிக்காமல் விட்டிருக்கிறார்கள். ஆகவே, காங்கிரஸ் ஆட்சியில் புதுப் புது வரிகள் விதிக்கப்பட்டிருப்பது மிகவும் விநோதமாகயிருக்கிறது.

இக்கொடுமையான வரிகளைக் கண்டித்து பிரசாரம் செய்தால் தேசத் துரோகி என்றும், காங்கிரஸ் விரோதி என்றும் சுயராஜ்ய எதிரி என்றும் பலவாறாகப் பேசுகிறார்கள்.

மங்களகரமான **மஞ்சள் பெட்டிக்கு**, ஓட்டு கொடுத்தால், வரிகளைக் குறைப்போமென்று கடந்த எலக்ஷனில் பிரசாரம் செய்தார்கள். வரிகளைக் குறைப்பதற்கு பதிலாக புதுப் புது வரிகளை விதித்திருக்கிறார்கள்.

ஆகவே, காங்கிரஸ்காரர்கள் பொதுஜனங்களுக்கு ஒரு வித நன்மையும் செய்யவில்லை என்பதோடு மீண்டும் மீண்டும் வரியின் மூலம் தொந்தரவை விளைவிக்கிறார்கள் என்பதை தெரிவிப்பதற்காகவே இப்புத்தகம் வெளியிடப்பட்டது.

சிறிய துறைமுகங்களின் அபிவிருத்திக்காக, ரிசர்வ் பண்டிலிருந்த 60-லக்ஷ ரூபாயில் $42\frac{1}{2}$-லக்ஷ ரூபாய் வரை பொது சிலவுக்காக எடுத்துக்கொண்டது போதாமல் மீண்டும் $1\frac{1}{2}$-கோடி ரூபாய் கடன் வாங்குவதாக இந்த பட்ஜட்டில் கூறப்பட்டிருக்கிறது.

முன்பு $4\frac{1}{2}$—கோடி கடன் வாங்கப்பட்டிருக்கிறது. 1939—40–இந்த வருடங்களின் பட்ஜட்டில் துண்டுவிழும் $17\frac{1}{2}$-லக்ஷத்திற்காக விற்பனைவரி விதித்து 15-கோடி ரூபாய் வசூல் செய்வது மிகவும் வருந்தத்தக்கது. விருதுநகர் தோழர் V. V. ஷண்முகம் அவர்கள் விற்பனை வரியால் 30 கோடி ரூபாய் வசூலாகுமென்று கூறியிருக்கிறார்.

**விவசாய மந்திரியின் காரியதரிசி தோழர் வரதாச்சாரியின் பிரசங்கம்.**

குண்டூர் டவுனில் கடந்த 19—3—39 ந் தேதி நடைபெற்ற கூட்டத்தில் விவசாய மந்திரியின் காரியதரிசி தோழர் **வரதாச்சாரி** பேசுகையில் கூறியதாவது.

எனக்கு அதிகார மிருந்தால் தற்போது காங்கிரஸ் மந்திரிகள் விதித்திருக்கும் வரிகளை எல்லாம் ரத்து செய்து சென்னை மாகாணத்திலுள்ள எல்லா ஜனங்களுக்கும் தலைவரி விதித்துவிடுவேன். எல்லாஜனங்களுக்கும் தலைவரி விதித்துவிட்டால் எல்லா ஜனங்களும் தலைவரியை செலுத்தி வருவார்களென்று பேசியிருக்கிறார்.

வரதாச்சாரியின் கருணையைப்பற்றி சகலரும் சிந்திக்குமாறு வேண்டுகிறோம். எல்லா ஜனங்களுக்கும் தலைவரி விதிப்பதாயிருந்தால் மிகவும் விநோதமாக யிருக்குமென்று மெயில் பத்திரிகை 22—3—39 ல் தலையங்கம் எழுதியிருக்கிறது.

## காங்கிரசை எதிர்ப்பவர்கள் யார்?

அகில இந்திய காங்கிரஸ் மகா சபையை எதிர்ப்பவர்கள் தென்னாட்டு சுயமரியாதைக்காரர்களென்று காங்கிரஸ் தலைவர்கள் அடிக்கடி மேடைப்பிரசாரம் செய்கிறார்கள்.

அகில இந்திய காங்கிரஸ் மகாசபையை, அகில இந்திய பொதுவுடமை கட்சியினரும், அகில இந்திய சமதர்ம கட்சியினரும், அகில இந்திய கிருஷித் தொழிலாளர் கட்சியினரும் அகில இந்திய புரட்சி கட்சியினரும், அகில இந்திய தொழிலாளர் கட்சியினரும் மற்றும் பல திறப்பட்ட கட்சியினர்களும் எதிர்த்து கிளர்ச்சி செய்கிறார்கள். ஈரோடு தோழர் **ஈ. வே. ராமசாமிப் பெரியார்** மட்டும் காங்கிரசை எதிர்ப்பதாக மற்றொரு காங்கிரஸ் தலைவர் கூறுகிறார்.

ஆகவே காங்கிரசை எதிர்ப்பது காங்கிரஸ் அல்லாத பலதிறப்பட்ட கட்சியினரும் என்பதை காங்கிரஸ் தலைவர்களும், காங்கிரஸ் தொண்டர்களும் நன்கு உணர வேண்டும்.

அகில இந்திய காங்கிரஸ் மகா சபையை மேல் நாடுகளிலுள்ள கம்யூனிஸ்டுக்கும், சோஷியலிஸ்டுகளும், தொழிலாளரும், பகிரங்க புரட்சிக் கட்சியினரும் எதிர்த்து பிரசாரம் செய்கிறார்கள்.

குறிப்பாக **சோவியத் ருஷியாவின்** பொதுவுடமை அரசாங்கம் அகில இந்திய காங்கிரஸ் மகாசபையை வன்மையாய்க்கண்டித்து பிரசாரம் செய்வதோடு, காங்கிரஸ் தலைவர்கள் மிகவும் பிற்போக்கான சுயநல வாதிகளென்று, முடிவு செய்திருக்கிறது.

தோழர் **ஜெயபிரகாஷ் நாராயணன்** அவர்களால் எழுதப்பட்டிருக்கும் சோஷியலிஸம் என் என்ற புத்தகத்தை காங்கிரஸ் தோழர்கள் வாசித்தறிந்தால் அகில இந்திய காங்கிரஸ் மகாசபையை எதிர்ப்பவர்கள் யார் என்பதை

உணர முடியும். 8½ கோடி முஸ்லீம் தோழர்களின் சார்பாக அகில இந்திய முஸ்லீம் லீக்தலைவரும் தோழருமான ஜனுப் ஜின்னு அவர்கள் அகில இந்திய காங்கிரஸ் மகாசபையை எதிர்த்து வருகிறார்.

## வியாபார மந்தமும், பொருளாதார நெருக்கடியும்.

சென்னை மாகாணத்தை பொருத்தவரையில் வியாபார மந்தமும் பொருளாதார நெருக்கடியும் அதிகரித்திருக்கிறது.

கடந்த சில மாதங்களாக மழையில்லாததால் நஞ்சை, புஞ்சை நிலங்களில் பயிர் செய்ய வசதி யில்லாமல் கரம்பு களாகக் காணப்படுகின்றன.

இதனுல் விவசாயத் தொழிலாளருக்கு சகிக்க முடி யாத வறுமைநோய் பீடித்திருக்கிறது.

இந்நோயை போக்குவதற்கு காங்கிரஸ் மந்திரிகளால் தக்க மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டு அனுஷ்டிக்கப்படு மானுல் விவசாயத் தொழிலாளர்கள் மிகவும் முற்போக்கடை வார்கள் என்பதில் சந்தேகமில்லை.

கிராமங்களில் எங்கு பார்த்தாலும் பஞ்சம் தலைவிரித் தாடுகிறது. கால் நடைகளுக்கு பெரும் ஆபத்து ஏற்பட் டிருக்கிறது.

விவசாயத் தொழிலாளர்கள் உண்பதற்கு உணவின்றி வாடி வதங்குகிறார்கள். விவசாயத் தொழிலாளர் ஜங்கம சொத்துக்களை பணம் படைத்த முதலாளிகள் கோர்ட்டு மூலம் பறிமுதல் செய்கிறார்கள்.

இக்கொடுமையால் வியாபார மந்தமும், பொருளா தார நெருக்கடியும் நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், வியாபாரிகளுக்கு விற்பனை வரி விதிக்கப் படுமானுல் வியாபாரிகளும், வியாபாரங்களும் அடியோடு

அழிக்கப்படும் என்பதை மீண்டும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ஆகவே காங்கிரஸ் மந்திரி சபையார் கொண்டு வந்திருக்கும் விற்பனைவரியை ரத்து செய்யவேண்டுமென்று மீண்டும் வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

விற்பனைவரி வியாபாரிகளை மட்டும் பாதிப்பாதாயிருந்தால் அதைப்பற்றி சிறிதும் கவலைப்படாமல் மகிழ்ச்சியுடன் வரவேற்க கடமைப்பட்டிருக்கிறோம். பிரஸ்தாபவரி பெரும்பாலும் பொது ஜனங்களை பாதிப்பதால் கண்டிக்க வேண்டிய பொருப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

விற்பனை வரியானது தொழிலாளர்கள் விவசாயிகள் இவர்களை பாதிப்பதோடு ஏழைமக்களையும் கசக்கி பிழிகிற மாதிரியில் காணப்படுவதால் விற்பனை வரியை சகலரும் கண்டிக்க முன் வந்திருக்கிறார்கள். ருக்ஷியாவைப் போன்ற ஐக்கிய அரசாங்கம் ஏற்பட்டு அரசாங்கத்தின் மூலம் வியாபாரங்கள் நடைபெறுமானல் பொது ஜனங்கள் நஷ்டமடையாமல் திருப்திகரமாக வாழ்க்கையை நடத்துவார்கள்.

விற்பனைவரி கண்டனம் என்ற புத்தகம் முதல் வெளியீடாக இரண்டாயிரம் காப்பிகள்வரை அச்சிடப்பட்டிருக்கிறது.

**விற்பனை வரியை வசூலித்து ரெவின்யூ வரியைக் குறைப்பார்களாம்.**

விற்பனை வரியை வசூலித்து ரெவின்யூ வரியில் நூத்துக்கு 50-பர்சன்டு குறைப்பதாக காங்கிரஸ் மந்திரிகள் கூறுகிறார்கள்.

தற்போது சென்னை மாகாணத்தில் ரெவின்யூ வரியின் மூலம் $8\frac{1}{2}$-கோடி ரூபாய் வசூலிக்கிறார்கள். விற்பனை வரி

யால் கிடைக்கும் 15-கோடி ரூபாய்களைக் கொண்டு ரெவின்யூ வரியில் 4¼-கோடி ரூபாய் குறைப்பார்களாம்.

ஏழைகளான விவசாயிகளிடம் அனுதாபம் காட்டப் போகிறார்களாம். சென்னை மாகாணத்திலுள்ள கள்ளுக் கடைகளெல்லாம் மூடப்படுமானால் 4½-கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுமென்று கூறப்படுகிறது.

விற்பனை வரியால் கிடைக்கும் 15-கோடி ரூபாயில், மதுவிலக்கு நஷ்ட ஈடுக்காக 4½-கோடி ரூபாயும், ரெவின்யூ வரி வஜா 4¼-கோடி ரூபாயும் போக மீதியிருக்கும் 6¼ கோடி ரூபாயை விவசாயிகளுக்கு இதர வசதிகள் செய்து கொடுக்கப் போகிறார்களாம். என்னே! காருண்யம் நிறைந்த காங்கிரஸ் மந்திரிகளின் கருணை.

சென்னை மாகாணத்திலுள்ள ஜனசங்கைப்படி நூற்றுக்கு எண்பது பேர்களாக விவசாயத் தொழிலாளர்கள் காணப்படுகின்றனர். மேற்கண்ட விவசாயத் தொழிலாளர்கள்தான் வியாபாரிகளிடம் வியாபாரம் செய்கிறார்கள்.

விவசாயத் தொழிலாளரிடம் வியாபாரிகள், ரூபாய் 1-க்கு ¼ அணா வசூலித்து ஒரு தம்படி காங்கிரஸ் கவர்ன்மெண்டுக்கு கொடுத்து மீதியிருக்கும் இரண்டு தம்படியை வியாபாரிகள் எடுத்துக்கொண்டு கோடீஸ்வரர்களாக வாழ வேண்டுமாம்.

மேற்கண்ட வரி வியாபாரிகளை கொழுக்க வைத்து ஏழைகளான விவசாயத் தொழிலாளரை கொலை செய்வதல்லவா? **நரியைக் கொலை செய்து அதன் மாமிசத்தை நரிகளுக்கு விருந்து வைப்பதுபோல்** காணப்படுகின்றன.

காங்கிரஸ்காரர்கள் மந்திரி சபையை கைப்பற்றி சுமார் 20-மாதங்களாகின்றன. இதுகாறும் காங்கிரஸ் மந்திரிகளின் ஏழை மக்களுக்கு செய்த நன்மை என்ன? புது

புது வரிகளை விதித்திருப்பதோடு, பள்ளிக்கூடங்களை மூடி யிருக்கிறார்கள்.

**காங்கிரஸ் காரர்கள் கடந்த எலக்ஷனில் செய்த வாக்-குறுதியை நிறைவேற்றினார்களா ?**

காங்கிரஸ்காரர்கள் கடந்த எலக்ஷனில் செய்த வாக் குறுதியை நிறைவேற்றினார்களா ?

**மங்களகரமான மஞ்சள் பெட்டிக்கு** ஓட்டுகளைப் போட் டால் மங்களகரமாக பொதுஜனங்கள் வாழமுடியுமென்று பறைசாற்றினார்கள்.

பொதுஜனங்களாகிய ஏழை மக்கள் மங்களகரமாக பசி யின்றி வாழ்கிறார்களா? மங்களகரமான மஞ்சள் பெட்டி யின் மகத்துவம் எங்கே? சென்னை மாம்பலம் தோழர் **ராஜகோபாலாச்சாரியின்** வீட்டில் மங்களகரம் தாண்டவ மாடுகின்றது. **சேத் ஜம்னுலால் பஜாஜி** வீட்டில் மங்களகரம் பிரகாசிக்கிறது. **ஜி. டி.பிர்லா** வீட்டில் மங்கள கரம் வீசுகின்றது. **சத்தியமூர்த்தி சாஸ்திரி வீட்டில்** மங் களகரம் விளையாடிக்கொண்டிருக்கிறது. வரி செலுத்தும் ஏழைமக்கள் வீடுகளில் மங்களகரத்திற்கு மாறாக **பஞ்சம்** தலைவிரித்தாடுகிறது; பசியின் கொடுமை அதிகரித்திருக் கிறது.

ஆகவே, மங்களகரம் என்பது சுத்தப் புரட்டு என் பதை பொதுஜனங்களாகிய வரி செலுத்துவோர் உணர வேண்டும். மங்களகரம் என்பது மடமையை வளர்க் கும். தற்போது காணப்படும் பொருளாதார உயர்வு தாழ்வை போக்கி பொருளாதாரத்தில் யாவருக்கும் சரி சமத்துவம் கிடைத்தால்தான் நாட்டில் அமைதியை காண முடியும். இன்றைய ரஷியாவில் பஞ்சம் மறைந்துவிட்டது. ரஷியாவில் வேலையில்லாத் திண்டாட்டத்தை களைந்ததற்

கும் காணமுடியாது. அங்கு பொருளாதார பிரச்சனையை தீர்த்து வைக்கப்பட்டிருக்கிறது.

ருஷியாவில் ருஷியர்கள் ஏழை, பணக்காரன் என்கிற வேற்றுமையை அறவே நீக்கி யாவரும் மன்னர்களாக வாழ்ந்து வருகின்றனர்.

ருஷியர்களின் பொதுவுடமை கொள்கை உலகமெங்கும் காட்டுத்தீபோல் பறவுகிறது. கடந்த மகாயுத்தத்திற்கு பின்பு ஏற்பட்ட புறட்சியின் பயனாக ருஷியாவில் மகத்தான மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

ருஷியாவின் பொருளாதார வெற்றியைக் கண்டு, வல்லரசுகளும், சிற்றரசர்களும், சில்லரை முதலாளிகளும் வெட்கமடைந்திருப்பதோடு ருஷியர்களின் பொதுவுடமை கொள்கையை எதிர்த்து தப்புப் பிரசாரம் செய்கிறார்கள்.

### காங்கிரசை வளர்ப்பவர்கள் யார்?

காங்கிரசை வளர்ப்பவர்கள் யார் என்பதை ஆராய்வோம். **சேத் ஜம்னலால் பஜாஜி, ஜி. டி. பர்லா, ஜவஹர் லால் நேரு, படேல், ராஜேந்திரப் பிரசாத்** இவர்களால்தான் காங்கிரசை வளர்க்கப்படுகிறது.

மேற்கண்ட தியாகிகளெல்லாம் பெரும் முதலாளிகள் என்பதை ஏழைமக்கள் உணரவேண்டும்.

அகில இந்திய காங்கிரஸ் காரியக்கமிட்டி மெம்பர்களில் பெரும்பாலோர் பெரும் முதலாளிகள் என்பதை எவராலும் மறுக்க முடியாது.

### முன்பு நடைபெற்ற பொப்பிலி ஆட்சியின் சிறப்பு.

முன்பு நடைபெற்ற பொப்பிலி ஆட்சியை முதலாளி ஆட்சி என்று கூறினார்கள். பொப்பிலி ஆட்சியில் புது

புது வரிகள் விதிக்கவில்லை. பொப்பிலி ஆட்சியில் பள்ளிக் கூடங்களை மூடப்படவில்லை. பொப்பிலி ஆட்சியில் தமிழ் மொழியை கொலை செய்ய சட்டம் செய்யவில்லை. பொப்பிலி ஆட்சியில் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றி வைக்கப்பட்ட இனும் குடி மக்கள் பாதுகாப்பு மசோதாவை எதிர்த்தவர்கள் யார்? பொப்பிலிக்குச் சொந்தமான மரங்களை கள்ளுக்கு விடாமல் நிறுத்தவில்லையா?

பொப்பிலி ஆட்சியில் பொப்பிலி ராஜாவின் பெயரால் உண்டி பிச்சை எடுக்கப்பட்டதா? பொப்பிலி ஆட்சியில் கடவுளின் பெயராலும் மதங்களின் பெயராலும் வர்ணாஸ்ரமமனு அதர்மக்கொள்கையின் பெயராலும் பாமரரின் பணத்தை கொள்ளையடிக்கப்பட்டதா? பொப்பிலி ஆட்சியில் சுயராஜியத்தின் பெயராலும் கதரின் பெயராலும், காந்தியத்தின் பெயராலும் பொது ஜனங்களின் பணத்தை கொள்ளையடிக்கப்பட்டதா? பொப்பிலி ஆட்சியில் 1-வயது 1½-வயது சிறுகுழந்தைகளை சிறையில் அடைத்து இம்சிக்கப்பட்டதா? இது போன்ற பல கேள்விகளை காங்கிரஸ்காரர்கள் தோழர், **பொப்பிலிராஜாவை** நேரில் கண்டு விசாரித்து தெரிந்துக்கொள்ளும்படி வேண்டிக்கொள்ளுகிறோம்.

ஆகவே, முன்பு நடைபெற்ற **பொப்பிலி ஆட்சியின்** நிர்வாகங்களைப் பற்றி மற்றொருமுறை விவரித்து எழுத ஆசைப்படுகிறோம்.

விற்பனை வரியால் ஏற்படும் கஷ்டங்களை மிகத் தெளிவாக விவரித்திருக்கிறோம். விற்பனை வரியால் ஏழை மக்களின் பணத்தை சுரண்டப்படும் என்பதை மீண்டும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

நமக்கும் காங்கிரஸ்காரர்களுக்கும் அபிப்பிராய பேதமிருக்கலாம். அபிப்பிராய பேதத்தை முன்னிட்டு அதி தீவிர பொதுவுடமை கொள்கையை கொலை செய்ய முடியாது.

விற்பனை வரியால் சென்னை மாகாணத்தில் பெரும் கிளர்ச்சி ஏற்படும் என்பதை தோழர். **ராஜகோபாலாச்சாரி** அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

பிரஸ்தாப வரியை அமுலுக்கு கொண்டுவராமல், வாபீஸ் வாங்கிக்கொள்ளப்படுமானால், பொது ஜனங்களும் தொழிலாளரும் பிரதம மந்திரியை வாழ்த்துவார்கள்.

ஒரு சட்டம் கொண்டுவருவதற்கு முன்பு, அதற்கு பொது ஜனங்கள் ஆதரவு இருக்கிறதா வென்று ஆலோசனை செய்து சட்டத்திற்கு எதிர்ப்பு இருந்தால், சட்டத்தைக் கொண்டுவராமல் நிறுத்தி விடுவதே அரசியல் தந்திரிகளின் புத்திசாலித்தனமாகும்.

தாம் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்று சாதிப்பது அறிவுடையோர் செய்கையல்ல.

நமது கட்சி அதிகாரத்திலிருக்கிறதென்று ஹிட்லர் கொள்கையை ஏழை மக்களிடம் அனுஷ்டிப்பது நீதியாகாது.

விற்பனை வரி விதித்து ஏழை மக்களை கசக்கிப் பிழிவதைவிட வேறு வழியில் வரி விதித்து பொதுஜனங்களுக்கு நன்மையை செய்ய முடியுமென்று காங்கிரஸ் மந்திரிகளுக்கு தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

சென்னை மாகாணத்திலுள்ள உயர்தர முதலாளிகளுக்கும், உயர்தர பணக்காரர்களுக்கும், உயர்தர லேவாதேவிக்காரர்களுக்கும், வக்கீல்களுக்கும், புரோகிதர்களுக்கும், மத குருமார்களுக்கும், பெரும் தேவாலயங்களுக்கும் வரி விதித்து அதன் மூலம் மதுவிலக்கு நஷ்டத்தையும், துண்டு விழுந்திருக்கும் 17½-லக்ஷம் ரூபாயையும் நேர் செய்துக் கொள்ளலாம்.

ஜட்ஜிகளின் சம்பளத்தையும், கலெக்டர்களின் சம்பளத்தையும் நூத்துக்கு 50-பர்சண்டு வீதம் குறைத்தால் மிகவும் நலமாயிருக்குமென்று ஆச்சாரியாருக்கு அறிவுறுத்துகிறோம். சென்னை சட்டசபை காங்கிரஸ் மந்திரிகளுக்கு 500-ரூபாசம்பளம் கொடுத்து வருவதை ரத்து செய்து அலவன்சு மட்டும் கொடுத்து வந்தால் போதுமென்று எச்சரிக்கை செய்கிறோம்.

முன்பு ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகளுக்கு 5000-ரூபாய் சம்பளம் கொடுத்திருக்கிறார்கள். ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகள் 5000-ரூபாய் சம்பளம் வாங்கி வந்ததை வன்மையாய்க் கண்டித்திருக்கிறோம். ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் 5000-ரூ. சம்பளம் வாங்கியதால் காங்கிரஸ் கட்சியினர் 500-ரூபா சம்பளம் வாங்குவது நியாயமென்று சில காங்கிரஸ் காரர்கள் கூறுகிறார்கள். பணம் ஆசை பிடித்தவர்கள்தான் 5000-ரூபா சம்பளம் வாங்கினார்கள் பணம் ஆசை இல்லாதவர்களான காங்கிரஸ் மந்திரிகள் எதற்காக 500-ரூபா சம்பளம் வாங்க வேண்டும்? தேசத்திற்கு தியாகம் செய்யும் மூர்த்திகளான காங்கிரஸ் மந்திரிகளுக்கு 500-ரூபா சம்பளம் எதற்கு? காங்கிரஸ் மந்திரிகள் சட்ட சபையில் கல்லுடைக்கிறார்களா? அல்லது மம்மட்டி எடுத்து வேலை செய்கிறார்களா? தினமொன்றுக்கு எட்டு மணிநேரம் அல்லது பத்துமணி நேரம் வெய்யிலில் எலும்பொடிய பாடுபட்டு வேலை செய்யும் சமதர்ம தொழிலாளருக்கு 0—4—0 அணு கூலி கொடுக்கப் படுகிறது.

30-தினங்களுக்கு அதாவது ஒரு மாதத்திற்கு 7½ரூபா சம்பளம் கொடுக்கப்படுகிறது. வெய்யிலில் வேலை செய்யும் சமதர்ம தோழர்களுக்கு கஷ்டம் அதிகமா? அல்லது திரேகத்தில் அழுக்குப் படாமல் சட்டசபை கட்டிடத்தில் உல்லாசமாக உட்கார்ந்து கொண்டு கை தூக்கும் காங்கிரஸ் மந்திரிகளுக்கு கஷ்டம் அதிகமா? என்கிற பிரச்சனையை

பொதுஜனங்களாகிய வரி செலுத்துவோருக்கே விட்டு விடுகிறோம்.

காங்கிரஸ் மந்திரிகள் சம்பளம் இல்லாமல் அலவன்சு வாங்கி வேலை செய்ய முடியாதென்றால், காங்கிரஸ் மந்திரிகள் பதவியை ராஜிநாமா கொடுத்துவிட்டு வெளியேறினால் சமதர்மவாதிகள் சட்டசபை மந்திரி பதவிகளை யேற்றுக் கொண்டு சம்பளம் வாங்காமல் அலவன்சு மட்டும் பெற்றுக்கொண்டு திறமையுடன் சட்டசபை நிர்வாகங்களை நடத்த முடியும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

காங்கிரஸ் மந்திரிகளைவிட சமதர்ம தோழர்களுக்கு அரசியல் பொருளாதார முன்னேற்ற கொள்கையில் அதிக அநுபவம் உண்டு என்பதை காங்கிரஸ்காரர்களில் பெரும்பாலோர் உணர்ந்திருக்கிறார்கள். சமதர்ம தோழர்கள் மந்திரி பதவிகளை யேற்றுக்கொண்டால், சகல கட்சியினரையும் சமத்துவமாக நடத்துவார்கள்.

ஆகவே, காங்கிரஸ் மந்திரிகள் தங்கள் பதவிகளை உடனே ராஜீநாமா கொடுத்து வெளியேறவேண்டும்.

## திண்டிவனம் வியாபாரிகளின் நிலைமை.

திண்டிவனம் வியாபாரிகளின் நிலைமையைப் பற்றி ஆராய்வோம். திண்டிவனத்தில் முன்பு பலர் சொந்த முதல் வைத்து லட்சம் கணக்கான ரூபாய்களுக்கு கடலக்காய் வியாபாரம் செய்து வந்தனர். தற்போது மேற்படி வியாபாரிகளெல்லாம் வடநாட்டு மார்வாடிகளுக்கு அடிமைகளாக கட்டுப்பட்டு நூத்துக்கு 8-வட்டி அல்லது 10-வட்டிக்கு கடன் வாங்கி வியாபாரம் செய்து வருகிறார்கள்.

சென்னை மாகாணத்திலுள்ள உயர்தர பணக்காரர்களான லேவா தேவிக்காரர்கள் சாதாரண வியாபாரிகளை நம்பி கடன் கொடுக்காததால் சாதாரண வியாபாரிகள் மார்வாடிகளிடம் அதிக வட்டிக்கு கடன்பட்டு தங்களுக்கு கிடைக்கும் லாபத்

தை மார்வாடிகளுக்கே கொட்டிக் கொடுக்கிறார்கள். அதிக வட்டி கொடுப்பதோடு கடலக்காய் வியாபாரத்தில் கிடைக்கும் லாபத்தில் ஒரு பாகத்தை மார்வாடிகளுக்கு கொடுக்கப்படுகிறது.

இரண்டாயிரம் மயில் தூரத்திலிருந்து சென்னை மாகாணத்திற்கு வந்திருக்கும் மார்வாடிகள் தைரியமாக வியாபாரிகளுக்கும், ஏழைகளான தொழிலாளருக்கும் அதிக வட்டிக்கு கடன் கொடுத்து பலகோடிக் கணக்கான ரூபாய்களை கொள்ளைக்கொண்டு போகிறார்கள். இதனால் சென்னை மாகாண வியாபாரிகளும், தொழிலாளரும் கெட்டுப் போகிறார்கள்.

சென்னை மாகாணத்திலுள்ள உயர்தர பணக்காரர்களான லேவாதேவிக்காரர்கள் பணத்தை இரும்பு பெட்டியில் வைத்து பூட்டிகாவல் கார்த்து வருகின்றனர். சிலர் நூற்றுக்கு 0—4—0 வட்டிக்கு பாங்கியில் வைத்திருக்கின்றனர். மார்வாடிகள் டவுன்களிலும் கிராமங்களிலும் வட்டி வியாபாரங்களை வைத்திருக்கின்றனர்.

மேற்படி மார்வாடிகளால் தான் காங்கிரசையும், காந்தியத்தையும் வளர்க்கப்படுகிறது.

விற்பனை வரியால் ஏழைகளான பாமரர்களையும், தொழிலாளரையும், பாட்டாளிமக்களையும், பசியாளரையும், விவசாயிகளையும் கொலை செய்யப்படும் என்பதை சகல கட்சியினரும் கூறியிருக்கிறார்கள்.

விற்பனைவரியானது வியாபாரிகளை பாதிக்குமென்று வியாபாரிகள் கருதமுடியாது. விற்பனை வரியைப்பற்றி பலர் பல மாதிரியாக கூறியிருக்கிறார்கள்.

நம்மை பொருத்த வரையில் விற்பனை வரியால் சுமார் 35-கோடி ரூபாய் வசூலாகு மென்று கூறவேண்டியிருக்கிறது.

உடனுக்குடன் மாறிக்கொண்டிருக்கும் சாமான்களுக்கு விற்பனைவரி செலுத்த வேண்டியிருக்கிறது.

ஏழைகளான கைத்தறி நெசவாளர்களுக்காக ஏற்பட்டிருக்கும் சென்னை மாகாண கைத்தறி நெசவாளர் கோவாபரேடிவ் சொசைடி மூலம் உற்பத்தி செய்யப்படும் ஜவுளி தினுசுகளை சொல்பலாபத்திற்கு விற்பனை செய்யப்படுகிறது.

மேற்படி ஜவுளி தினுசுகளுக்கும் விற்பனைவரி விதிக்க வேண்டுமென்று விற்பனைவரி மசோதாவின் நோக்கமானல் ஏழைகளான கைத்தறி நெசவாளர்களை அடியோடு கொலை செய்யப்படும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ஏனெனில் மேற்படி கோவாபரேடிவ் சொசைடியின் மூலம் தயாரிக்கப்படும் ஜவுளி தினுசுகளுக்கு பலமில் ஜவுளி தினுசுகள் போட்டி போடுகின்றன. தனிப்பட்ட முதலாளிகள் ரொக்க கைத்தறிகள் வைத்து உற்பத்தி செய்யும் ஜவுளி தினுசுகளை கொண்டு வந்து, கோவாபரேடிவ் சொசைடி ஜவுளி தினுசுகளுக்கு அழிவு ஏற்படுகிற முறையில் போட்டி போடுவதை எவராலும் மறுக்க முடியாது. இந்நிலையில் கோவாபரேடிவ் சொசைடி ஜவுளி தினுசுகளுக்கு விற்பனை வரி செலுத்துவ தென்றல் கோவாபரேடிவ் சொசைடி ஜவுளி வியாபாரங்களை அடியோடு நசுக்கப்படும் என்பதை ஏனைய கோவாபரேடிவ் சொசைடி தலைவர்களும், காரிய தரிசிகளும், மெம்பர்களும் நன்கு உணர வேண்டும். இதை உணர்ந்து தக்க கிளர்ச்சி செய்ய வேண்டுமென்று ஏழைகளான கைத்தறி நெசவாளர் சார்பாக மீண்டும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

கோவாபரேடிவ் சொசைடி ஜவுளி தினுசுகளை விற்பனை செய்வதற்காகவும், ஆர்டர்கள் வாங்குவதற்காகவும் கடந்த சில மாதங்களுக்கு முன்பு பல்லாரிஜில்லாவிற்கு அருப்புக் கோட்டை அருமைத் தோழரும் சமதர்ம வீரரு

மான வீ. ர, சு. வீரய்யா அவர்களுடன் நாம் சென்றிருந்தோம்.

கோவாபரேடிவ் சொசைடி கைத்தறி நெசவாளர் மீது அன்பு வைத்திருக்கும் சில வியாபாரிகள் தான் கண்ணியமாக ஆர்டர்கள் கொடுத்தார்கள். தனிவுடமை மனப்பான்மையைச் சேர்ந்த பல வியாபாரிகள் ஆர்டர் கொடுக்க மறுத்து விட்டார்கள். விற்பனை வரி கண்டனம் என்ற புத்தகத்தை வியாபாரிகளும், தொழிலாளரும், மற்றும் பல திறப்பட்ட கட்சியினரும் வாங்கி வாசித்தறிய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

சென்னை மாகாண நாஸ்திக சங்கத்தின் உபதலைவரும் நேட்டிவ் டாக்டருமான சமதர்ம நாஸ்திக **சி. கே. குப்புசாமி,** யேகாம்பரபுரத் தெரு 4-நெ. பெரிய காஞ்சிபுரம்.

---

# முன்னேற்றம்.

கூடிய விரைவில் காஞ்சிபுரத்திலிருந்து தோழர். நேட்டிவ் டாக்டர் சமதர்ம நாஸ்திக சி. கே. குப்புசாமி, அவர்களை ஆசிரியராகக் கொண்டு முன்னேற்றம் என்ற வாரப்பத்திரிகை வெளிவரும்.

| | |
|---|---|
| ஆயுள் சந்தா ரூபா. | 50—0—0 |
| வருட சந்தா ,, | 3—0—0 |

## தோழர். ஈ. வே. ராமசாமிப் பெரியார் சேவை.

தோழர். ஈ.வே. ராமசாமிப் பெரியார் சேவையைப்பற்றி நமது கட்சி எதிரிகள் கூட புகழ்ந்து பத்திரிகைகளில் எழுதுகிறார்கள். தோழர். ஈ. வே. ராமசாமிப் பெரியார் அவர்கள் கடந்த பனிரெண்டு ஆண்டுகளாக சுயமரியாதை இயக்கத்தில் பங்கெடுத்துக்கொண்டு தியாகம் செய்து வருகிறார். பெரியாரை இந்திய லெனின் என்று அழைக்கவேண்டும். ருஷியாவில் லெனின் கஷ்டப்பட்ட மாதிரி தென்னிந்தியாவில் பெரியார் அவர்கள் சமதர்ம பொருளாதார அரசியல் முன்னேற்றத்திற்காகவும், பார்ப்பனரல்லாதார் விடுதலைக்காகவும், உழைத்து வருகிறார். தள்ளாத வயதில் தனது உடல் நிலையை கவனியாமல் கட்டாய இந்தியை எதிர்த்து சிறைச் சென்றிருக்கிறார் என்றால் பெரியார் சேவையை யார் தான் புகழாமலிருக்கமுடியும்.

பெரியார் அவர்கள் தன்னலம் கருதாமல் பிறர்நலம் பொருட்டு தியாகம் செய்கிறார்.

வருங்கால சரித்திரத்தில் சரித்திர நிபுணர்கள் பெரியார் சேவையைப் பற்றியும், பெரியார் அறிவு ஆராய்ச்சியைப் பற்றியும், பெரியார் லட்சியத்தைப் பற்றியும் புகழ்ந்து எழுதுவார்கள்.

# நாஸ்திக விளம்பரம்.

## கடவுள் இல்லை.

### லாலா லஜபதிராய் கருத்து.

*(தோழர் லஜபதிராய் அவர்கள் தனது நண்பர் தோழர். ஜி. டி. பிர்லாவுக்கு எழுதிய கடிதம் ஒன்று "பீபிள்" பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதின் மொழிபெயர்ப்பு.)*

ஒரு காலத்தில் கடவுளை நான் நம்பியதுண்டு. கடவுளை நோக்கிப்பிரார்த்திப்பதால், அவர் நமது வேண்டுகோளைக்கேட்டு நமக்கு நன்மை செய்கிறாரென நம்பினேன். நன்மையான தர்ம கைங்கர்யஞ் செய்கிறவர்களுக்குக் கடவுள் நன்மையையே செய்கிறார் என்றும், துஷ்டர்களை அடியோடு அழித்து நிக்கிரகஞ் செய்கிறாரென்றும் எண்ணினேன். இந்த நம்பிக்கையில் நான் மகா உறுதிகொண்டிருந்தேன். ஆனால் படிப்படியாக என் நம்பிக்கை குறைந்து கொண்டு வந்து இப்பொழுது அந்த நம்பிக்கையே எனக்கில்லாமல் போய்விட்டது. இந்த மாயவஞ்சகம் நிறைந்த ஒரு உலகத்தை ஆண்டு நடத்திக் காப்பாற்றி வரும் ஒரு கடவுளை நான் எப்படி நம்ப முடியும்? அக்கடவுள் மகா அன்புடையவர் மகா கருணாநிதி, சத்தியவந்தர், சர்வ வல்லமையுள்ளவர், எங்கும் பரம்பொருளாக நிறைந்திருப்பவர் என்பதை நான் எப்படி நம்பக்கூடும். மகா தயாநிதியாகி, சத்தி

யமே ஒரு உருவான மெய்க்கடவுள் இருந்தால் இந்த உல கத்தைச் சிருஷ்டித்திருக்க முடியுமா? இந்த உலகம் அநீதி, நிறைந்தது. சமத்வத்திற்குப் பரம விரோதியாய் இருக்கிறது. சகல கொடுமைகளுக்கும் உறைவிடம். மிருகத்தனமானது. வஞ்சகம், சூது, ஏமாற்றம் முதலியவை உருவெடுத்த மனிதர்கள் நிறைந்தது. இந்த நாசமான உலகத்தை சத்திய வந்தரான கடவுள் உண்டு பண்ணியிருக்க முடியுமா? பல ஆயிரக்கணக்கான கொடியர் ஜீவிக்கிறார்கள், இவ்வுலகில் இன்னும் பலர் முட்டாள்கள், மூளை என்பதே கிடையாது. அன்பு, சத்தியம் நிறைந்த இருதயத்தை இழந்த துஷ்டர்கள் பல ஆயிரம், ஏழைகளை இம்சிக்கும் ராக்ஷதர்களும், சத்ய வந்தரை தொல்லைப்படுத்தி, அடக்கி நசுக்கி மண்ணுக்கு இரையாக்கும் மிருகத்தனம் படைத்தவர்களும் இன்னும் பல ஆயிரம். கொள்ளையடிக்கும் திருடர்கள் பலர், சுயநலமே உருக்கொண்ட தீயர்கள் எத்தனையோ லக்ஷம். இந்த சுய நலப்பேய்களே மகாசொகுசாக, உல்லாச வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். ஏழைகளை வஞ்சித்து இம்சித்துத் துன்புறுத் துகிறார்கள். ஏழைகளின் கதியோ அதோ கதிதான். அவர் கள் மானமிழந்து அடிமைகளாகி, தரித்திரத்திற்குள்ளாகி, உண்ண உணவின்றி, உடுக்க ஆடையின்றி பசியால் வாடி மடிகின்றனர். முடிவில் மண்ணோடு மண்ணாய்ப்போகிறார் கள். உலகில் இந்தக்கொடுமைகள் ஏன்? சத்தியமும், உண் மையும் உருக்கொண்ட ஒரு தெய்வம் இந்த கொடிய உலகத் தை உண்டுபண்ணியிருக்க முடியுமா?

## வேதங்கள் பொய்.

சத்தியம் என்பது என்ன? சத்தியம் எங்கிருக்கிறது? வேதங்களிலாவது உண்மை இருக்கிறதா; அல்லது நம்பிக்கை யாவது உண்டா? வேதங்களில் சத்தியத்தைக்கண்டு பிடித்து விட்டதாக சிலர் பறை சாற்றிக்கொண்டிருக்கிர்கள். அதெல் லாம் வெறும் பொய்க்கூற்று. அவர்கள் ஏதோ மாய்கையில் மூழ்கி அவ்வாறு அல்லற்படுகிறார்கள். வெறும் மத வெறிக்

கொண்டவர்களே, உண்மையிருப்பதாக உளறிக்கொண் டிருப்பதுண்டு. புத்த பகவானே, கிறிஸ்துவோ, முகமது நபியோ உண்மையைக் கண்டு பிடித்திருக்கிறார்களா? அவர்கள் கண்டுபிடித்த சத்தியம் எங்கே? அந்த சத்தியம் மறைந்து விட்டதா? அல்லது அதை போதிக்கப் புறப்பட்டவர்கள் திரித்து சத்தியத்தையே மறைத்து விட்டார்களா? இவர்கள் மனிதர்களைப் பாகுபாடுபடுத்தி, பிரித்து வைத்தது ஏன்? சத்திய மென்றால் ஒற்றுமையின்றி பல பாகுபாடு உண்டு பண்ணி சுயநலத்துடன் வாழ்வதென்று அர்த்தமா?

## லாலாஜி வாழ்க்கை.

இவ்விதம் கூறும் நான், ஏன் பொது வாழ்க்கையில் ஈடுபட்டு இந்திய சுதந்திரத்திற்காகப் பாடுபட்டு வந்தேனெனக் கேட்கலாம். உண்மையைக்கூறுமிடத்து நான் சுயநல நோக்கங்கொண்டே பொது சேவையில் ஈடுபட்டேனென்று கூறுவேன். அதாவது நான் உள்ளவரை ஏதேனும் ஒரு காரியம் செய்து கொண்டிருக்கவேண்டும். இது மனித சுபாவத்தின் ஒரு குணம். அதுசதா என்னைக்கிளர்ச்சி செய்யத் தூண்டிக்கொண்டிருக்கிறது.

---

**விற்பனை வரிக் கண்டனம்** என்ற புத்தகத்தை முதல் வெளியீடாக இரண்டாயிரம் காப்பிகள் அச்சிட்டிருப்பதால், சில ஜில்லாக்களுக்கு மட்டும் விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படும்.

விற்பனை வரிக் கண்டனம் என்ற புத்தகத்தை ஏழு தினங்களில் அச்சடித்துக் கொடுத்த ஸ்ரீ இலக்ஷ்மி பிரஸ் சொந்தக்காரரும், தோழருமான, **மா. வேதபுரி முதலியார்** அவர்களுக்கு நமது நன்றியை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

# B. Syed Khasim Sahib,

SHAROFF MERCHANT,

**CONJEEVARAM.**

---

நீண்டகாலமாக நாணயமும், நம்பிக்கையும், பொதுஜன நன்மதிப்பையும், பெற்ற எமது கடையில் தற்காலத்திற்கேற்ற நவீன புதியமாதிரி சவரப்பொன் ஆபரணங்களும், வேலைப்பாடு அமைந்த எல்லா தினுசு வெள்ளிச்சாமான்களும், பஜார் ரேட்டுக்கு கூடுமானவரை சகாயமாகவும் உத்திரவாதத்துடனும் கிடைக்கும். ஆர்டர் நகைகள் எவ்வித கேட்லாக் தினுசுகளாக இருந்தாலும் சகோதர சகோதரிகளின் விருப்பப்படி குறித்த காலத்தில் குறைந்த கூலியில் சிறந்த முறையில் அநுபவம்வாய்ந்த தொழிலாளர்களைக்கொண்டு தயாரித்து கொடுக்கப்படும். தயவு செய்து ஒருமுறை ஆர்டர் செய்து உண்மை உணரவும்.

**பாஷா சாஹிப் என்கிற**

## B. சையத் காசிம் சாஹிப்,

ஷராப் & நகை வியாபாரம்,

143, 144, செங்கழுநீரோடை வீதி காஞ்சிபுரம்.

# பூஹனி மூல சித்த வைத்திய

# விளம்பரம்.

---

மூல வியாதிகளை ஆபரேஷன் செய்யாமல் 5-நாள் மருந்தால் முளைகளை சுலபமாய் கீழே விழ சிகிச்சை செய்யப்படும்.

அன்பார்ந்த தோழர்களுக்கு ஓர் அறிக்கை:— மூலம், இரத்த மூலம், முளை மூலம், சீழ் மூலம், உள்மூலம், வெளி மூலம், கொம்பு மூலம், வேர் மூலம், யானை மூலம், நரம்பு மூலம், குடல் மூலம், ஆசன மூலம், பவுத்திர மூலம், கொடி மூலம், ஆசனபுத்து, பல பவுத்திர வியாதிகள், கன்னத்து கண்டமாலை, கழுத்து கண்டமாலை, நீர் ஒழுக்கு, பெண்கள் சம்பந்தத்தினுலுண்டாகும் பலவிதமான வெள்ளை வியாதிகள், தீராத பல கிரந்த வியாதிகள், பலரணங்கள், சுரம், சன்னி, டைபார்ட்டி; நிமோநியா, டபுள்நிமோநியா, சூதக வாய்வு, மேக காரகம், பெண்களுக்கு மாதவிடாய் காலங்களில் உண்டாகும் வயிற்றுவலி, பெரும்பாடு, தீராத கிராணிக்பேதி, சீதபேதி, வாய்வு, முடக்கு வாய்வு, பாரிச வாய்வு, அண்ட வாய்வு, கீல் வாய்வு மற்றும் பல நோய்களுக்கு தக்க மருந்துகள் கொடுத்து சிகிச்சை. செய்யப்படும்.

## மருந்துகளின் விபரம்.—

| | | | |
|---|---|---|---|
| மண்டூரம் தோலா 1-க்கு | 15 | 0 | 0 |
| சிலாசித்து பஸ்பம் 1-அவு. பாட்டல் 1க்கு | 2 | 0 | 0 |
| அபரேக்கு செந்தூரம் தோலா 1-க்கு | 10 | 0 | 0 |

| | | | |
|---|---|---|---|
| வெண்வெங்கம் பஸ்பம் தோலா 1-க்கு | 20 | 0 | 0 |
| அயச்செந்தூரம் தோலா 1-க்கு | 10 | 0 | 0 |
| அயக்காந்த செந்தூரம் தோலா 1-க்கு | 12 | 0 | 0 |
| காந்த செந்தூரம் தோலா 1-க்கு | 13 | 0 | 0 |
| உலாந்த லிங்கக்கட்டு 1-க்கு | 10 | 0 | 0 |
| பூரக்கட்டு 1-க்கு | 7 | 0 | 0 |
| தாளகக்கட்டு 1-க்கு | 10 | 0 | 0 |
| காந்தக்கட்டு 1-க்கு | 15 | 0 | 0 |
| சுரமாத்திரை 1 அவுன்சு பாட்டல் 1-க்கு | 2 | 0 | 0 |
| சுகபேதி மாத்திரை 1 அவு. பாட்டல் 1க்கு | 1 | 0 | 0 |
| சீதபேதி மருந்து 1 அவுன்சு பாட்டல் 1க்கு | 2 | 8 | 0 |
| கடுக்கா லேக்கியம் டப்பி 1-க்கு | 2 | 0 | 0 |
| தாது வளர்க்கும் லேக்கியம் டப்பி 1-க்கு | 10 | 0 | 0 |
| குங்கிலியம் பஸ்பம் பாடல் I-க்கு | 2 | 8 | 0 |

நேடிவ் டாக்டர் சமதர்ம நாஸ்திக

C. K. குப்புசாமி

ஏகாம்பரபுரத் தெரு,

நெ. 4, பெரிய காஞ்சீபுரம்.

---

# ஆஸ்திக நாஸ்திக

# சம்வாதம்.

## கடவுள் உண்டா? இல்லையா??

என்கிற விவாதங்களைப் பற்றி மிகத்

தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது.

**விலை அணா. 0—6—0**

கிடைக்குமிடம் :—

நேடிவ் டாக்டர் சமதர்ம நாஸ்திக

C. K. குப்புசாமி,

ஏகாம்பரபுரத் தெரு,

நெ. 4, பெரிய காஞ்சிபுரம்.

**இன்சூரன்ஸ் செய்துக்கொள்வது**
**மனிதர்களுக்குப் பாதுகாப்பு!**

பிரிமியர் இன்சூரன்சு பில்டிங்,
சுசைடி தம்பு செட்டித் தெரு, 289—**மதருஸ்.**

ஷ கம்பெனி மிகவும் நம்பிக்கையுடையது.

ஏஜன்ஸி :—

**V. சங்கராச்சாரியார்,**
பெரிய கம்மாளத்தெருவு
**நெ 67, பெரிய காஞ்சிபுரம்.**

---

**தினசரி 'விடுதலை' படியுங்கள்**

ஏஜண்டு :—

C. P. **தண்டாயுதபாணி,**
13 ஜி. வைகுண்ட பெருமாள் வீதி,
பெரிய காஞ்சிபுரம்

---

**வி. சி. திருவேங்கட முதலியார்,**
பலசரக்கு மளிகை, பவுடர் வியாபாரம்,
டேன்சு மார்கட், **காஞ்சிபுரம்**

---

மானேஜர். **தாருல் இஸ்லாம்,**
21—ஆண்டர்சன் வீதி,
ஜி. டி. **மதருஸ்.**

வருட சந்தா **5—0—0** 6-மாத சந்தா **2—8—0**


---

ஸ்ரீ இலக்ஷ்மி பிரஸ், திருவத்திபுரம். 114—39.

மனோரம்மியத்தை மல்குவது!

தாம்பூலத்திற்கு தனிசிறப்பாயது!!

நறுமணத்தை நல்குவது!!!

உடலுறுதிக்கு உகந்தது!

# எது ?

# சக்தி

சுகந்த பாக்குத்தூளேயாகும்

அத்தூளைவாங்கி உபயோகித்து ஆனந்தமடையுங்கள்.

(அசல்பீடன் பாக்கினால் தயாரித்தது)

கல்கத்தா ஜெனரல் ரிஜிஸ்தர் நெ. 661 நம்பரைப் பார்த்து வாங்குங்கள்.

எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

**T. P. S. பொன்னப்பன்,**

51, சக்தி விலாஸ்,

சின்ன காஞ்சிபுரம்.